# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.353/2008 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | சுப்பம்மாள் |

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of February 2021.

நான் வள்ளியூரில் வசித்து வருகிறேன். பள்ளியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும் உறவினர்கள். 20.05.2008 ம் தேதி என் அப்பா இறந்தார் மறுநாள் கல்வெட்டான்குழிக்கு மாலை 6.30 மணிக்கு சென்றேன். சுடலை செங்கலால் என்னுடைய தலையில் அடித்து இடது பக்க கன்னத்திலும் காயம் ஏற்பட்டது. கன்னத்தில் வீக்கம் ஏற்பட்டது வேலாயுதம் செங்கலால் இடதுபக்க தலையில் அடித்தார். பார்வதி என் தலைமுடியை பிடித்து இழுத்து என்னை வீட்டிற்க்குள் போக விடாமல் அடித்தார். மாயாண்டி தேவடியாமுண்டை என் வீட்டிற்கு வராதே என திட்டினார். காட்டப்படும் புகார் மனு நான் அளித்தது தான் அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது என்னுடைய மகள் என்னை காவல்நிலையம் அழைத்து சென்றார். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நீங்கள் சம்பவம் நடக்கும் போது எங்கு குடியிருந்தீர்கள் என்றால் இலங்குளத்தில் இருந்தேன். இலங்குளத்திற்கும் கல்வெட்டான்குழிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் குறுக்கால் வந்தால் 2 மைல் இருக்கும் சுற்றி வந்தால் 5 மைல் இருக்கும். நான் ஆட்டோவில் சென்றேன் 2 மைல் வழியில் சென்றேன். சம்பவ காலத்தின் போது உங்கள் அப்பாவின் பிரேதம் வீட்டில் இருந்ததா என்றால் நான் செல்வதற்குள் அடக்கம் செய்துவிட்டார்கள். சம்பவத்திற்கு 3 நாள் முன்பே உங்கள் அப்பாவை அடக்கம் செய்துவிட்டார்கள் என்றால் சம்பவத்திற்கு முன்பு தான் அடக்கம் செய்துவிட்டு வீட்டிற்க்கு வந்துவிட்டார்கள். விசேஷம் முடிந்து வீட்டில் கூட்டம் இருந்ததா என்றால் இல்லை. வீட்டில் உள்ள ஆட்கள் மட்டும் இருந்தார்கள் என்றால் சரிதான் வேறு யாரும் இல்லை. உங்கள் அப்பா வீடு

தெருவில் இருந்து 200 அடி தள்ளி இருக்கும் என்றால் இல்லை ரோட்டிற்கு மேலேயே இருக்கும். வீட்டே சுற்றி காம்பவுண்ட் உண்டு என்றால் இல்லை. சம்பவ நடந்தது வீட்டின் உள்ளே என்றால் சரியல்ல வீட்டிற்கு வெளியே தான் நடந்தது. வேலாயுதம் உங்களுக்கு யார் என்றால் அப்பாவின் சித்தி மகன். சுடலை, மாயாண்டி ஆகியோர் உடன்பிறந்த சகோதரர். பார்வதி சுடலையின் மனைவி என்றால் சரிதான். உங்களுக்கு திருமணம் செய்து வைத்தது யார் என்றால் எனதுஅப்பா. உங்கள் அப்பாவிடம் 5 மரக்கால் நிலமும் 7 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது என்றால் சரிதான். நஞ்சை நிலத்தை நீங்கள் அடமானம் வைத்துள்ளீர்கள் என்றால் நான் வைக்கவில்லை எனது அப்பா வைத்தார். நீங்கள் புஞ்சை நிலம் 2 ஏக்கரை உங்கள் மகள் பெயரில் எழுதிவைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. எந்த இடத்தில் சம்பவம் நடைபெற்றது என்று உங்கள் புகாரில் சொல்லவிலலை என்றால் வீட்டின் படியில் வைத்து நடந்தது அது என் அப்பாவின் இடம். அந்த வீட்டிலும் உங்களுக்கு பாகம் கேட்டிற்களா என்றால் சரிதான். சம்பவ நடந்ததும் நீங்கள் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் காவல்நிலையத்திற்கு சென்று எழுதி கொடுத்துவிட்டு மருத்துவமனைக்கு சென்றேன். கல்வெட்டான்குழீக்கும் மூலைக்கரைப்ட்டிக்கும் காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் நான்குநேரியில் இருந்து 3 மைல் அதற்குபின் 5 கி.மீ இருக்கும். சம்பவம் நடைபெற்ற பின் அரை மணி நேரத்தில் காவல்நிலையத்திற்கு சென்று இருப்பீற்களா என்றால் ஆட்டோவில் முக்கால் மணி நேரத்தில் சென்றேன். இந்த புகார் மனுவை யார் எழுதினார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் என் மகள் எழுதி கொடுத்தார். மனுவை மகள் தான் எழுதினார் என போலிஸ் விசாரணையில் கூறி உள்ளீர்களா என்றால் சொன்னேன். மருத்துவரிடம் தலையில் காயம் அல்லது கண்ணிற்கு கீழே காயம் என்று கூறினீர்களா என்றால் இடதுபக்க முகம் முழுவதும் காயம் இருந்தது. நீங்கள் கொடுத்த புகார் மனுவில் என்ன எழுதி இருந்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார்மனுவில் எந்த கையில் காயம் சம்பவ இடம் பற்றி என எழுதி இருந்தீற்களா என்றால் சொன்னேன். கையில் எந்த வகையான காயம் என்றால் கடித்ததால் ஏற்பட்டது மருத்துவரிடமும் மேற் சொன்ன மாதிரி தான் சொன்னீர்கள் என்றால் சரிதான். மருத்துவரிடம் உங்களுக்கு மொத்தம் எத்தனை காயம் என்று கூறினீர்கள் என்றால் முகத்திலும் விரலிலும் காயம் என்று சொன்னேன். அப்போது மயக்கத்தில்இருந்தீற்களா என்றால் மயக்கமாக இருந்தது ஆனால் தெளிவாக சொன்னேன். சம்பவ நடந்ததில் இருந்து மருத்துவமனை செல்லுவம் வரை நீங்கள் மயக்கமாக இருந்தீற்களா என்றால் மயக்கமாக இருந்தேன் தெளிந்துவிட்டு திரும்ப மயங்கிவிட்டேன். சம்பவம் நடந்தபிறகு நீங்கள் போலிசாரை பார்ததீற்களா என்றால் பாாத்தேன். கல்வெட்டான்குழியில் இருந்து மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்திற்கு 20 நிமிடத்தில் சென்றுவிடாலாம் என்றால் சரிதான். நீங்கள் எங்கே குடியிருப்பதாக உங்கள் சகோதரருக்கு தெரியுமா என்றால் சரியல்ல. உங்கள்அப்பா இறந்ததை உங்களுக்கு சொல்லகூடாது என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லை என்றால் சரியல்ல. உங்கள் அப்பா இறந்ததை உங்களிடம் சொல்லாததால் தான் உங்களுக்கு அவர்கள் மீது கோபம் என்றால் சரியல்ல அடித்ததால் தான் கோபம். கோபம் இல்லை அவர்கள் அடித்ததால் தான்கோபம். நீங்கள் எதிரிகளை கல் கட்டை கொண்டி எறிந்துள்ளீர்கள் அதை பிடிங்கும் போது தான் உங்களுக்கு அடிப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த காயத்திற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் அப்பா சொத்தை எதிரிகள் தராததால் தான் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல சொன்னநேரத்தில் சொன்ன விதத்தில் இந்த புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரனை இல்லை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No.353/2008

Deposition Of Witness for

Prosecution PW 2
Defense
Court

Name மகாலெட்சுமி

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of February 2021.

நான் திருக்குறுங்குடியில் வசித்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய அம்மா. ஆஜர் எதிரிகளை தெரியும் உறவினர்கள். 20.05.2008 ம் தேதி என்னுடைய தாத்தா கல்வெட்டான்குழியில் இறந்துவிட்டார் அது எங்களுக்கு தெரியாது. 21.05.2008 அன்று நானும் எனது அம்மாவும் என்னுடைய தாத்தா வீட்டிற்கு சென்றோம். என்னுடைய அம்மா தாத்தா வீட்டிற்கு சென்றவுடன் எதிரி சுடலை என்னுடைய அம்மாவை வீட்டே விட்டு வெளியே போகுமாறு சொன்னார். அதற்கு என் அம்மா நான் எப்படி செல்லமுடியும் என்னுடைய அப்பாவை பார்க்க வந்துள்ளேன் என்று கூறினார் இருவருக்கும் வாய் தகராறு ஏற்பட்டது எதிரி சுடலை கையால் எனது அம்மாவை தலையின் முடியை பிடித்து இழுத்து இடது பக்க தோள்பட்டையில் கையால் அடித்தார். வேலாயுதம் கல்லால் எனது அம்மாவின் இடது தோள்பட்டையில் அடித்து வீக்க காயம் ஏற்படுத்தினார். என்னுடைய அம்மாவிற்கு தலைசுற்று ஏற்பட்டது. நான் ஆட்டோவில் ஏற்றி நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர் மூலைக்கரைப்பட்டி காவல்நிலையத்திற்கு எனது அம்மாவை அழைத்து சென்றேன் அங்கு நானும் எனது அம்மாவும் புகார் கொடுத்தோம் நான் தான் என் அம்மாவின் பெயரில் புகார்மனு எழுதினேன். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

உங்கள் அம்மாவிற்கு இருக்கிற காயத்தை மருத்துவரிடம் யார் சொன்னது என்றால் நான் தான் கூறினேன். உங்கள்அம்மா மயக்க நிலையில் பேச முடியாமல் இருந்தார் என்றால் சரிதான்.

சம்பவத்தின் போது நீங்கள் என்ன படித்து கொண்டிருந்தீற்கள் என்றால் 9 ம் வகுப்பு ராதாபுரத்தில் உள்ள நித்தியகல்யாணி பள்ளியில் படித்து கொண்டிருந்தேன். 108 ஆம்புலன்ஸில் உங்கள் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். நான்குநேரி அரசு மருத்துவமனையில் எத்தனை நாள் இருந்தீற்கள் என்றால் ஞாபகம் இல்லை. உங்கள் பள்ளியின் ஆவணத்தை பார்த்தால் பள்ளியில் இருந்தீற்களா என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான் நான் பள்ளியில் இல்லை வீட்டில் தான் இருந்தேன். எந்த ஆட்டோவில் சென்றீர்கள் என்றால் பரப்பாடியில் ஏறினோம், யார் வண்டி என்றெல்லாம் தெரியாது. சம்பவம் வீட்டின் தான் நடந்ததா என்றால் வீட்டிற்க்கு வெளியில் நடந்தது. அங்கு ஊர்காரர்கள் நிறைய பேர் இருந்தார்கள் என்றால் 10, 15 பேர் இருந்தார்கள். காவல்நிலையத்தில் யாரிடம் புகார் கொடுத்திற்கள் என்றால் அந்த வயதில் தெரியாது. போலிஸ் விசாரணையில் சம்பவம் நடந்தவுடன் பரப்பாடி சென்றுவிட்டேன் என்று போலிஸ் விசாரணையில் சொன்னதாக இருந்தால் அது தவறு என்றால் சரியாக ஞாபகமில்லை. மருத்துவர் உங்கள் அம்மாவை நீங்கள் தான் மருத்துவமனை அழைத்து வந்ததாக எழுதி கொண்டார் என்றால் ஞாபகமில்லை. நீங்கள் தான் உங்கள்மருத்துவமனை அழைத்து சென்றீகளா என்றால் நான் தான் அழைத்து சென்றேன். உங்கள் அம்மாவிற்கு எங்கெங்கே காயம் ஏற்பட்டது என்றால் இடது கை ஆள்காட்டி விரல் இடது தோள்பட்டை காயம் ஏற்பட்டு இருந்தது. மேற்குரிய இருகாயம் தவிர வேறு காயம் கிடையாது என்றால் செங்கலை தூக்கி எறிந்ததில் இடது காதிற்கு கீழ் காயமும் இடது தோள்பட்டையிலும் கைவிரலிலும் மூன்று காயங்கள் இருந்தது. சம்பவம் எப்போது நடந்தது என்றால் மதியம் 3, 3.30 மணியளவில் நடந்தது. அரசு மருத்துவமனைக்கு எப்போது சென்றீர்கள் என்றால் 4 மணிக்குள் சென்றுவிட்டோம். காவல்நிலையத்திற்கு எவ்வளவு நேரத்தில் சென்றீர்கள் என்றால் இரவு 9.00 மணிளயவில் சம்பவம் நடந்த அன்றே சென்றோம். எதிரிகளுக்கு உங்கள் அம்மா மீது கோபம் உண்டா என்றால் என்மீது கிடையாது என் அம்மாவிற்கும் அவர்களுக்கும் பிரச்சனை இருந்தது. உங்களுக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 7 வருடம் ஆகிறது. கல்யாணத்திற்கு எதிரிகள் வந்தார்கள் என்றால் நாங்கள் யாரையும் கூப்பிடவில்லை. உங்கள் அம்மாவிற்கு திருமணம் செய்து வைத்தது மாமாவும் தாத்தாவும் சேர்ந்து தான் திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சின்ன மாமா (மாய கிருஷ்ணன்) தான் செய்து வைத்தார். உங்கள் அம்மா எதிரிகளிடம் சொத்தை பிரித்து கேட்டாரா என்றால் சம்பவத்திற்கு முன்பு கேட்டார். சம்பவத்திற்கு முன்பே இருந்து உங்கள் அம்மாவின் பாகத்தை தர மறுக்கவில்லை என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. உங்கள் அம்மாவும் தாத்தாவும் சேர்ந்து சொத்தை அடமானம் வைத்தார்கள் என்றால் சரியல்ல. சொத்தை பங்கு வைக்கப்பட்டுவிட்டதா என்றால் தெரியவில்லை. உஙகள் தாத்தா சொத்தை அபகரித்து உங்கள் மீது எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. தாத்தா இறந்ததை உங்கள் அம்மாவிடம் சொல்லாததால் அவர்களுக்கு எதிரி மீது கோபம் என்றால் சரிதான். எதிரிக்கு உங்கள் அம்மா மீது கோபம் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. உங்கள் அம்மாவிற்கு எதிரி மீது கோபம் அதனால் தான் கல்லால் அடிக்க போன போது காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் காயத்திற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் நேரடியாக சம்பவத்தை பார்க்கவில்லை பொய்யாக சாட்சி சொல்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை